# மெட்ரோ நிலையத்தில், 'எலக்ட்ரிக்' ஆட்டோ

**சென்னை, ஜன. 14–**

ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையத்தில், பயணியருக்கு, 'எலக்ட்ரிக்' ஆட்டோ வசதி துவக்கப்பட்டது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

பயணியர் வருகையை அதிகரிக்க, மெட்ரோ ரயில் நிலையங்களில், வாடகை இல்லா சைக்கிள், குறைந்த கட்டணத்தில், ஷேர் ஆட்டோ, கார், வாடகைக்கு மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் வசதியும் செய்யப்பட்டுள்ளன.



ஆலந்துார், மெட்ரோ ரயில் நிலையத்தில், பயணியரின் வசதிக்காக, 'எலக்ட்ரிக்' ஆட்டோ சேவை, அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வசதிகளுடன், ஆலந்துார் மெட்ரோ நிலையத்தில், 'நம்ம ஆட்டோ' திட்டத்தில், எலக்ட்ரிக் ஆட்டோ வசதி, சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

சி.எம்.ஆர்.எல்., போக்குவரத்து பிரிவு இயக்குனர், நரசிம்பிரசாத் கூறியதாவது:

ஆலந்துார் நிலையத்தில், சோதனை முறையில், எலக்ரிக் ஆட்டோ வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, மூன்று ஆட்டோக்கள் இயக்கப்படும்.

போரூர், ராமாபுரம், டி.எல்.எப்., மற்றும் ஐ.டி., பார்க் வரை, இந்த ஆட்டோவில் செல்லலாம். கட்டணம், 10 ரூபாய் செலுத்த வேண்டும்.

இந்த ஆட்டோக்களுக்கு, பயணியரிடையே உள்ள வரவேற்பையொட்டி, மற்ற நிலையங்களிலும், இவ்வசதி அறிமுகம் செய்யப்படும்.

இவ்வாறு, அவர் கூறினார்.